REGD. No. M. 6311 ❀ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணுதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

சொன்ன சொல்லை மறந்தவர்கள்!

பாடியாலா, மார்ச் 3—

பெப்சு மாநில மந்திரிகளுக்கு மாதச் சம்பளம் ரூ. 1,250 என்றும், முதன் மந்திரிக்கு ரூ. 1,500 என்றும் நிர்ணயம் செய்யும் மசோதா ஒன்று சட்ட சபையில் நிறைவேறியுள்ளது. விவாதத்தின்போது, எதிர்க் கட்சியினர், மந்திரிகளுக்கு ரூ. 500-க்குமேல் சம்பளம் இருக்கக்கூடாது என்று வற்புறுத்தினர்.

மசோதா, மேலும் ஒவ்வொரு மந்திரிக்கும், எல்லா வசதிகளுடன் கூடிய இலவச வீடு வாடகையின்றியும், தண்ணீர் மின்சாரத்திற்கான செலவுகளை சர்க்காரே கட்டும் என்றும் கூறுகிறது.

மலர் 2] சென்னை: மாசி 21உ சனி (5—3—55) ★ ★ வெளியூர் : மாசி 22உ ஞாயிறு (6—3—55) [இதழ் 22]

காளிதாசனுக்கு நினைவு நாளாம்!

தங்கள் கலைஞர்களுக்கும் விழா தேவை என்று பிற மொழியினர் கோருவரே எனக் கவலை!

காளிதாசன் கால ஆராய்ச்சியில் கருத்து வேற்றுமை

முதியவர் சபையில் வெட்டிப் பேச்சு!

கவி காளிதாசன் வாழ்ந்த காலம் பற்றி டில்லி 'முதியவர் சபை'யில் வாதப் பிரதிவாதம் நடைபெற்றிருக்கிறது.

கிறிஸ்து றபிப்பதற்கு முன் 56-வது ஆண்டு என்ற கருத்தை மறுக்கும் நோக்கத்துடன், பல வடமொழி சுலோகங்களை சபையில் டாக்டர் பி. வி. கனே என்ற உறுப்பினர் எடுத்துக்காட்டினார்.

ஒவ்வொரு ஆண்டும கார்த்திகை சுக்கில ஏகாதசியில், இந்தியா முழுவதிலும காளிதாசன் நினைவு நாள் கொண்டாட ஏற்பாடு செய்தல்;

அவந்தி (உஜ்ஜெயினி) நகரில் காளிதாசன் நினைவுக் கோயில் எழுப்புதல். அங்கு காளிதாசன் பெயரால் ஒரு ஆராய்ச்சிக் கழகத்தை நிறுவுதல். காளிதாசன் இயற்றிய நூற்கள் அனைத்தையும் திரட்டி, உலக மொழிகள் அனைத்திலும் அவைகளை மொழிபெயர்த்து அளித்தல்;

காளிதாச நாடக மன்றம் ஏற்படுத்தல்.

மேற் கூறிய கோரிக்கைகள் கொண்ட ஒரு தீர்மானத்தை கோபால கிருஷ்ண விஜய்வர்கியா என்ற உறுப்பினர் கொண்டு வந்தார்.

அத்தீர்மானத்தின் முன் பகுதியை ஒப்புக்கொள்ள மறுத்து, 'கோயில்' என்ற சொல்லுக்கு பதில் 'மண்டபம்' என்று திருத்த வேண்டும் எனக் கூறி, பிற்பகுதியை முழு மனதுடன் ஆமோதித்தார் பி. வி. கனே என்ற உறுப்பினர்.

"காளிதாசன் வாழ்ந்த காலமே நிச்சயிக்கக்கூடாததாக இருக்கும் நிலையில், மாதத்தையும், நாளையும் குறிப்பிடுவது பொருத்தமற்றது," எனக் காரணங் கூறி, தீர்மானத்தின் முற்பகுதியை மேற்படி கனே எதிர்த்திருக்கிறார்.

சந்திராவதி லகன்பால் என்ற பெண் உறுப்பினரும், கிஷன்சந்த் என்பவரும் தீர்மானத்தை முழு மனதுடன் வரவேற்றனர்.

ஓங்காரநாத் என்பவர் தீர்மானத்தை எதிர்த்தார்.

"நாட்டில் பற்பல மொழிகள் வழங்குகின்றன. ஒவ்வொரு மொழியிலும் பல இலக்கியப் புலவர்கள் இருந்திருப்பர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் நினைவு நாள் கொண்டாடுவது என்பது ஒருக்காலும் இயலாததாகும்."

மேற்குறிப்பிட்ட காரணத்தைச் சுட்டிக் காட்டி, ஓங்காரநாத் தீர்மானத்தை ஒப்ப மறுத்தார்.

இம்மறுப்பு, கிஷன்சந்துக்கு பேராச்சிரியத்தைக் கொடுத்துவிட்டது. அவர் கூறியதாவது :—

"காளிதாசன் ஒரு தேசியக் கவி, நாடகாசிரியன் என்ற பிரச்சினையில் மாறுபடுபவர் ஒருவரும் இல்லை. வட்டார மொழிகளில் இலக்கியப் பெரும்புலவர்கள் இருப்பார்களானுல், அவர்களுடைய பெயரை, அந்தந்த வட்டாரங்களில் சிறப்பிப்பதில் ஒருவருக்கும் தடை இருக்க நியாயமில்லை தென்னிந்திய மொழிகளில் சில வடமொழியிலிருந்து பிறந்தில்லாதவைகளாக இருந்தபோதிலும், 70 சதவிகிதம் வடமொழி சொற்களைக் கொண்ட மொழி அகராதிகளைக் கொண்டிருப்பதால், பொதுவாக உள்ள வடமொழி சொற்கள் பலவற்றை, அப்பகுதியில் உள்ள பெரும்பான்மையினரால் அறிந்து கொள்ளமுடியும்"

காளிதாசர் கிருஸ்து பிறக்க 56 ஆண்டுகளுக்கு முன்பே பிறந்தவர் என்ற வாதத்தை முறியடிக்க, டாக்டர் கனே கூறியதாவது :—

"'ஹோரா சாஸ்திர'த்தை எழுதிய வராக மீரா, கிருஸ்து இறந்த பின் 505 ஆண்டுகளுக்குப் பிறகுதான் வான சாஸ்திரக் கணக்கு ஏற்பட்டது என்று' கூறும் பொழுது, காளிதாசர் பலமுறை 'ராசி'களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

"விக்கிரமாதித்தியனிடமிருந்த 'நவரத்தினங்களும்' ஒரே காலத்தைச் சார்ந்தவைகளா என்பதில் சந்தேகமிருக்கிறது

"வராக மீரா எப்பொழுது வாழ்ந்தார் என்பதில் சந்தேகமேதுவுமில்லை; தான், உஜ்ஜயினியில் உள்ள அவந்தியைச் சார்ந்தவர் என்று அவரே தனது படைப்பில் குறிப்பிட்டிருக்கிறார்; ஆனல் 'காளிதாசர் தங்கள் தங்கள் இடத்தைச் சேர்ந்தவர்' என்று நாட்டின் பல பகுதியினரும் கூறிக் கொள்கிறார்கள."

பொய்ச் சாட்சியம் கூறியவர் மீது நடவடிக்கை!

படித்திருந்தும் உண்மையைத் திரித்துக் கூறுகின்றனர்

பூனு, மார்ச் 4—

"பல்வேறு வாழ்க்கைத் துறைகளிலிருக்கிற வேறு வேறு சாதிப் பிரிவினரான இந்த 25 சாட்சிகளும், கீழ் நீதிமன்றத்தில் தாங்கள் கொடுத்த உறுதி வாக்குகளை காற்றில் பறக்கவிடுவது, துரதிருஷ்டவசமானதாகும்."

"இந்தப் பண்பு மிகுந்த நகரத்தில், படித்த கூட்டத்தைச் சேர்ந்த இந்தச் சாட்சிகள் எல்லோரும் உண்மையை திரித்துக் கூற முற்பட்டிருப்பது பரிதாபத்திற்குரியதாகும்."

"குடிமக்கள் என்ற முறையில், அவர்கள், நீதிக்கும், உண்மைக்கும் எவ்வளவு மதிப்புத் தருகிறார்கள் என்பதை இது நமக்குத் தெளிவாகச் சொல்லுகிறது."

"தாங்கள் கூறியுள்ள மிதமிஞ்சியப் பொய்ச் சாட்சியத்திற்காக, சட்டத்தின் நீண்ட கரங்கள் அவர்களைத் தண்டிக்காது விடாது என்பதை, அந்த உண்மையை அவமதித்த சாட்சிகள் மனதிலிறுத்த வேண்டும்,"

—இவ்வாறு, திரு. ஆர். கே. ஜோஷி என்ற பூனு நகர மூன்றுவது உதவி செஷன்ஸ் நீதிபதி, வழக்கொன்றில் தீர்ப்பளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கடந்த 1954 நவம்பர் 4-ந் தேதியன்று தின்ஷா ஜாம்ஷெட்ஜி ஈரானி என்பவரை சோடா புட்டிகளாலும், கத்திகளாலும் தாக்கிக் கொலை செய்ய முயன்றதாக மூவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

அதையொட்டி விசாரிக்கப்பட்ட சாட்சிகள், தாங்கள் கீழ் நீதி மன்றத்தில் கூறியவற்றை மறுத்துக் கூறியது கண்ட நீதிபதி 'அவர்கள் தண்டனைக்குரியவர்கள் என்று ஏன் கருதப்படக்கூடாது?' என்பதற்கான காரணங்களைக் காட்டுமாறு 'நோட்டீஸ்' அனுப்ப உத்தரவிட்டார்.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்த தீர்ப்பளிக்கையிலேயே அவர், மேற்கண்டவாறு கருத்தறிவித்தார்.

தொழிலாளர் கோரிக்கைகள் வெற்றி!

புகலூர் சர்க்கரை ஆலை நிர்வாகிகள் சம்பள உயர்வு தர சம்மதித்தனர்

புகலூர், மார்ச் 4—

புகலூர் சர்க்கரை ஆலை தொழிலாளர் சங்கத்திற்கும்—ஆலை நிர்வாகத்திற்குமிடையே நிலவி வந்த தொழிற் தகராறு பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிட்டதாகத் தெரியவருகிறது.

தொழிற் சங்கம் நீண்ட நாட்களாக வற்புறுத்திவந்த கோரிக்கைகளில் பெரும் அளவு வெற்றியடைந்துவிட்டது.

தொழிற் சங்கத்தின் சார்பில் தோழர்கள் டி. பி. மூர்த்தி, பி. எம். முத்து, ஏ. ரகிமான், கே பிரபு ஆகியோர் ஆலை நிர்வாகத்தினருடன் பிப் 25, 26, 27 தேதிகளில் சென்னையில் இறுதியாகப் பேச்சுவார்த்தை நடத்தி உத்தேச ஒப்பந்த நகல் ஒன்றைத் தயாரித்தனர். அந்த ஒப்பந்த நகல் 2-3-55ல் தொழிலாளர் சங்க 'சிப்ட்' பொதுக் கூட்டங்களில் விளக்கிக் கூறப்பட்டு தொழிலாளர்களின் ஒப்புதலோடு, 3—3—55ல் கையெழுத்தாகி அமுலுக்கு வந்துள்ளது.

ஒப்பந்தப்படி, குறிப்பாக மாதச் சம்பளக்காரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 5—10—0 வீதமும், வாரச் சம்பளக்காரர்களுக்கு தினம் ஒன்றுக்கு 0—3—0 வீதமும் சம்பள உயர்வு கிடைக்கும்.

ஆலை மூடுவதற்கு முன்பு நிரந்தரத் தொழிலாளர்களாயிருந்தவர் மீண்டும் நிரந்தரமாக்கப்படுவார்கள்.

மற்றும் பிராவிடெண்ட் நிதி, 'ஓய்வு' நாட்கள் முதலிய பல்வேறு பிரச்சினைகளுக்கும் ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது

மேற்கண்ட சலுகைகள் அனைத்தும் 1954-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதற்கொண்டே கணக்கிடப்பட்டு 15 தினங்களில் தொழிலாளர்களுக்குத் தரப்படும்.

ஒப்பந்தப்படி, 'ஒரு ஆண்டு நாலைகு: மாதத்திற்கு பிரஸ்தாப கோரிக்கைகளில் தொழிற் சங்கம் தகராறை கிளப்பக்கூடாது,' என நிபந்தனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (ந-நி)

உரிமைகளை பேரம் பேசவில்லை!

டில்லி உதவி தங்குதடையின்றிக் கிடைக்கிறது!

நெய்வேலிச் சுரங்கம் குறித்து பக்தவத்சலத்தின் பரம்பரை அடிமைப் புத்தி

"தொழில் அபிவிருத்திக்கு உதவக்கூடியதாக உள்ள நெய்வேலி நிலக்கரியை பெரும் அளவில் தோண்டி எடுக்க சர்க்கார் எல்லாவித முயற்சிகளையும் மேற்கொள்ளும்,"

என்று, மந்திரி பக்தவத்சலம் சட்ட சபையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"நமது உரிமைகளை மத்திய அரசாங்கத்திற்கு, இந்தப் பிரச்சினையில் பேரம் பேசுவது என்கிற கேள்வியே எழவில்லை"

"மத்திய அரசாங்கத்தின் உதவி தங்கு தடையின்றிக் கிடைத்து வருகிறது; சென்னை அரசாங்கம் மட்டுமே அத்திட்டத்தை மேற்கொள்ள முடியாததினுல், இரு அரசாங்கங்களும், கூட்டாக மேற்கொண்டு நடத்த வேண்டியுள்ளது," என்றும் மந்திரியார் பகன்றிருக்கிறார்.

கல்லக்குடி அறப்போர் வழக்கில் தீர்ப்பு

சிறை தண்டனை குறைக்கப்பட்டது

சென்னை, மார்ச் 4—

கல்லக்குடி வழக்கில் ஈடுபடுத்தப்பட்டு, திருச்சி நீதிமன்றத்தில் மூன்று முதல் ஒரு வருடம்வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த, கண்ணதாசன், அன்பில் தருமலிங்கம் உள்ளிட்ட 13 பேர்களின் சார்பில் செய்யப்பட்டிருந்த அப்பீல் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

வழக்கை விசாரித்த நீதிபதி சோமசுந்தரம் அவர்கள், சிறைத் தண்டனையை உறுதி செய்தார். ஆனுலும், இதுவரை தோழர்கள் அனுபவித்த தண்டனைக் காலம் போதுமென்று கூறி தண்டனையைக் குறைத்துத் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

தோழர்களுக்காக வழக்கறிஞர்கள் வி. எல் எதிராஜ், கே. நாராயணசாமி ஆகியோர் வழக்காடினர்.

தெரியுமா?

1955 ஜனவரி மாத இறுதி வரை, இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கு, நஷ்ட ஈடாக ரூ. 9 கோடியும், 1,90,000 ஏக்கர் விவசாய நிலமும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 5—3—1955 சனி

அழிவே இல்லையா?

பிறந்த பொன்னாடு—பொன் விளையும் பூமி; கண்ணான மணி விளையும் மண்; எண்ணற்ற வளங்கொழிக்கும் மாமலை; முத்து முளைக்கும் கடல்; முல்லை மணக்கும் காடு—இத்தனையும் கொண்டதுதான்! ஆனாலும், அத்தனையும் அவனுக்கல்லவே!

அவனது சொந்த நாடு, வஞ்சக நெஞ்சம் கொண்ட அந்நிய நாட்டவரின்-அநியாய வட்டி வாங்கும் அக்கிரமக்காரின்—அறியாமை வளர்ப்போரின் வேட்டைக் காடு!

விளைவு—உழைப்பில்லை; வாழ்வில்லை!

"உழைக்கிறேன் — வாழ முடியவில்லை" என்ற வேதனைக் குரல்-இங்குள்ளோரிடம்!

வேதனையை மறக்க வேறு நாடு செல்கிறான் - பெற்றோரையும், உற்றாரையும், மற்றோரையும் மறந்து—அல்ல, அல்ல—துறந்து!

'இங்கே இறந்து வாழ்வதிலும், அங்கு உழைத்துச் சாகிறேன்,' என்று கூறி, ஓடுகிறான்—கண்கள் இரத்தக் கண்ணீர் வடிக்க' இதயம் - சோகச் சுமையைத் தாங்க! ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழியாது. போர்க் குரல் எழுப்பும் வயிற்றைக் கழுவ! தன்னைப் பெற்றெடுத்த வயிற்றுக்கு கஞ்சி வார்க்க!

இப்படி, திராவிடத்திலிருந்து ஓடி, இலங்கையில் குடியேறியவர்களின் உழைப்பைக் கொண்டுதான், இலங்கை, தன்னை உயர்த்திக் கொண்டது, வளத்தால், செல்வத்தால்.

உயர்ந்த பின், 'ஓடிப் போ! உன் உழைப்பு இனித் தேவை இல்லை,' என்று கூறிக் கொடுமை புரிகிறது!

கொத்தலாவலை அரசாங்கத்தின் கொடுமை, அங்கு உழைத்த அந்த உத்தமர்களை, 'நீங்கள் இந்தியர்'கள்; இந்தியாவுக்குப் போய்விடுங்கள்," என்று கட்டளையிட்டது!

"இந்தியர்களல்ல அவர்கள்; ஏற்றுக்கொள்ள மாட்டோம், நாங்கள்; 'நாடற்றவர்கள்' அவர்கள்,"—கூசாமல் கூறினார், இந்தியாவை 'ஒரே நாடாகவே ஆண்டு தீருவோம்'—என்று கூறி நிற்கும் வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள்!

பிரச்சினை வலுத்தது! கொடுமை புரியும் கொத்தலாவலையை, தட்டிக்கேட்க எவருமில்லாத நிலை ஏற்பட்டதால், ஏங்கித் தவித்தனர் திராவிடர்; 'வாழ்வு நமக்கு இனிச் சாவில் தான்,' என்றஞ்சினர்!

பிரச்சினை வலுத்து, 'தட்டிக் கழிக்க முடியாது,' என்ற நிலை அச்சுறுத்தியதின் விளைவாக, இந்தியப் பேரரசு, பிரச்சினையின் ஆழத்தை அறிந்து கொள்ள முயற்சிக்காமல், பெயரளவில், ஒப்பந்தம் ஒன்றை கொத்தலாவலை சர்க்காருடன் செய்துகொண்டது. அந்தக் கண்துடைப்பு வேலையைக் காட்டி, 'அதுவே பிரச்சினைக்குப் பரிகாரம்,' என்றும், தனக்கும் 'இலங்கை இந்தியர்' துயரத்தைப் போக்குவதில் அக்கறை இருப்பதாகவும் கூறி, ஏமாற்ற முயற்சித்தது.

இலங்கையிலிருந்த திராவிடரை சிறிது சிறிதாய், இலங்கையை விட்டுத் துரத்துவதற்கு அந்த ஒப்பந்தமே 'லைசென்ஸ்' என்று கொண்டு, கொத்தலாவலை சர்க்கார், கொடுமையின் எல்லையைத் தொட முன்னேறியது!

இந்நிலையில், இலங்கை—இந்தியா ஆகிய இரு அரசாங்கங்களின் விபரீதப் போக்கினால், இலங்கைவாழ் திராவிடர், இன்னலின் உச்சத்தால் வாட்டப்பட்டு வதையுண்டனர்.

'நாங்கள் தூங்கிவிடவில்லை' என்பதுபோல, மீண்டும் இந்தியப் பேரரசு கடந்த 1954-ம் ஆண்டு அக்டோபரில்—கொத்தலாவலை சர்க்காருடன் முன்னர் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இரு சாராரும் சிரமமின்றி நேர்மையுடன் அமுல் செய்வதற்காக புதுப்பித்துக் கொண்டதாகவும், ஆகவே, துயருறும் இலங்கை இந்தியர் இனிமேல் தொல்லைகள் அனுபவிக்க வேண்டியிராதென்றும் கூறிற்று.

இந்த நிலைகளை எல்லாம் நாம் அவ்வப்போது விளக்கி, 'இலங்கை இந்தியர் பிரச்னைக்கு, இந்தியப் பேரரசு பரிகாரம் தேடித் தர முடியாது,' என்பதை எடுத்துக் காட்டி, இடித்துரைத்து வந்திருக்கிறோம்.

கடந்த ஆண்டு அக்டோபர் திங்களிலிருந்து இன்றுவரை, புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்தம் எந்த ஒரு உருவான பலனையும் தந்திருக்கிறது என்று யார் தான் கூறிவிட முடியும் — அந்த ஒப்பந்தத்தைப் பயன்படுத்திக்கொண்டு, சில்லறை சில்லறையாக, திராவிடரை இலங்கை வெளியேற்றி வருவதையும், வெளியேற்றப்பட்டு இங்கே வந்த அவர்களுக்கு வாழ்வு தர, இந்தியா மறுப்பதையும் தவிர?

இரண்டு தினங்களுக்கு முன்பு, டெல்லி மக்கள் சபையில், "ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கம் அமுல் செய்கிற முறை இந்திய அரசாங்கத்திற்குத் திருப்தி தருவதாக இல்லை," என்று கூறப்பட்டிருக்கிறது.

எப்படி திருப்தி தருவதாக இருக்க முடியும்?

செந்தினத்தின் சிங்கார வாழ்வைக் கண்டுகளிக்க, தன்னைத் தயாரித்துக்கொண்டிருந்த பண்டிதரின் உள்ளத்தில், 'பெரும் வரவேற்பு, வாழ்த்தும், பாராட்டுரையும் கிடைக்கப்போகின்றன,' என்ற எண்ணம் எழுப்பிய துடிப்பு கொத்தலாவலையுடன் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கு முன்னால், இலங்கைவாழ் திராவிடர் கொத்தலாவலையால் படும் இன்னல்களின் தரத்தையும், அளவையும், ஆழத்தையும் அவர் அறிந்து கொள்ள முடியாதபடி செய்துவிட்டது.

இலங்கையில் வதியும் திராவிடரின் பிரச்சினைகளான வாழ்வு, வோட்டுப் பதிவு, உரிமை, கடமை முதலியவை பற்றியும், மற்றும் ஒப்பந்தம் அமுல் செய்யப்பட வேண்டிய நடைமுறை பற்றியும் தெளிவான, திட்டமான உடன்பாடு எதும் அன்றே காணப்படாத தின் விளைவு, அள்ளித் தெளித்த அவசரக்கோல — அலங்கோலமாயிற்று.

இன்று, 'அதிருப்தியடைந்துள்ளோம்' என்று பெருமூச்சு விடுவதினால் பயன் என்ன காண முடியும்?

இலங்கையும், பதிலுக்கு, 'இந்தியாவின் போக்கு எங்களுக்கும் பிடிக்கவில்லை,' என்று குறைபட்டுக் கொண்டிருக்கிறது.

இருவரும் ஒருவரையொருவர் குற்றஞ் சுமத்துகின்றனர்; இடையில், திராவிடர் சிக்கிச் சீரழிகின்றனர்; எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை யிழந்து தவிக்கின்றனர்.

இல்லம் வந்த விருந்தாளியை விரட்டுவதற்காக, 'வந்திருப்பவர் என் நண்பர்; மிகவும் வேண்டியவர்; அவர் இருக்கும்போது இப்படி என் மானத்தை வாங்குகிறாயே?' என்று கணவனும், 'அவரால் எனக்கென்ன? குடும்பம் வேறு உங்களுக்கு வட்டணம்?' என்று மனைவியும், சண்டையிடும் நாடகம் நடித்து, வந்த விருந்தினரை விரட்டியடிப்பது போல்தான், இந்திய—இலங்கை அரசாங்கங்களின் போக்கு இருக்கிறது!

இந்தக் கூத்தின் இடையில் தான் வேதனையால் வெந்து சாம்பலாகும் இலங்கைவாழ் திராவிடர், 'நாங்கள் அனுபவிக்கும் அவதிக்கு அழிவே இல்லையா?' என்று கேட்கின்றனர்!

பம்பாய் மாநிலத்தில் புதிய கல்வித் திட்டம்

19 லட்சம் குழந்தைகள் பயன்பெறுவர்

பம்பாய் மாநிலத்தில் உள்ள 7 முதல் 11 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 19 லட்சம் பேருக்கு மேல் 1961 முடிவுக்குள் கட்டாய ஆரம்பக் கல்வி பெறுவர் என்று கூறப்படுகிறது.

இதற்காக சர்க்காரிடம் திட்டமிருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

அடுத்த நான்காண்டுக்குள், இத்திட்டப்படி சுமார் 2 கோடி ரூபாய் செலவில், 281,000 மாணவர்கள் கல்வி பெறுவர் என்றும் தெரிய வருகிறது.

80 லட்சம் பேர்

டிக்கெட்டின்றி இரயில்பிரயாணம்

கடந்த 1954-ம் ஆண்டில் சுமார் 80 லட்சம் பேர் இந்திய இரயில் வேக்களில் டிக்கெட்டின்றி பிரயாணம் செய்திருப்பதாயும், இவர்களிடமிருந்து அதிகக் கட்டணமாக ரூ 1½ கோடி வசூலிக்கப்பட்டிருப்பதாயும், டில்லி மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

"பிடிபடாமல் தப்பியவர்கள் எத்தனை பேர்,? அதனால் சர்க்காருக்கு எவ்வளவு நஷ்டம்?" என்பது கணக்கிட முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டதாம்.

அணுசக்தி நிறுவனத்தில் திருட்டு

பாரிஸ் அடுத்திருக்கும் இரகசிய அணுசக்தி நிறுவனத்திலிருந்து 208 கதிரியக்கம் பாய்ந்த ஈயக் கம்பிகள் திருட்டுப் போய்விட்டதாகவும், அந்தத் திருடர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படவிருப்பதாக எச்சரித்தும் பிரெஞ்சு அரசாங்கம் அறிவித்திருக்கிறதாம்.

சபைத் தலைவரின் ஓரவஞ்சனை!

எதிர்க் கட்சியினர் வெளியேற்றம்

பீகார் சட்டசபையில் சம்பவம்

பாட்னா, மார்ச் 2—

பீகார் சட்ட சபையின் எதிர்க் கட்சியைச் சேர்ந்த 50 உறுப்பினர்கள், நேற்று வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது வெளியேறியிருக்கின்றனர்.

உதவி சபைத் தலைவர் ஜகத் நாராயண்லால் என்பவர், ஒவ்வொரு எதிர்க்கட்சி அங்கத்தினருக்கு இரண்டு காங்கிரஸ் அங்கத்தினர் வீதம் அழைத்துப் பேசச் செய்த போக்கைக் கண்டிப்பதற்காகவே வெளியேறினார்கள் என்று கூறப்படுகிறது.

பின்பு, 'எதிர்க்கட்சியிலிருந்து ஒருவர், காங்கிரசிலிருந்து ஒருவர்,' என்று பேச அழைப்பதாக தலைவர் வாக்களித்ததும் மீண்டும் விவாதத்தில் கலந்துகொண்டனர் எனத் தெரிகிறது.

ராஜஸ்தான் சட்டசபை தரும் ருசிகரமான தகவல்கள்

ஜெய்ப்பூர், மார்ச் 2—

ராஜஸ்தான் சட்டசபையில், ராஜப் பிரமுகர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் போது பல ரசமான விஷயங்கள் வெளிப்பட்டிருக்கின்றன.

எதிர்க் கட்சியைச் சேர்ந்த பலர், "கவர்னரின் உரையில் பாராட்டக்கூடிய அம்சம் எதுவுமே இல்லை," என்று குறிப்பிட்டிருக்கின்றனர்.

மேலும், கவர்னரின் உரை மிகத் 'தரக் குறைவான' இந்தி மொழியில் ஆற்றப்பட்டது என்றும், அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

வேதபால் தியாகி என்ற உறுப்பினர் பேசுகையில், 'மாநிலத்தில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப் பட்டிருக்கிறது,' என்ற கூற்றை மறுத்தார்.

"ராஜ்கர் என்ற இடத்தில் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டார்; அவரை விடுவிக்க, கொள்ளையருக்கு ஏராளமான தொகை தர வேண்டியிருந்தது; ஆனால் இதுவரை போலிசார் யாரையுமே கைது செய்யவில்லை; ஏனெனில், சில காங்கிரஸ்காரர்களும் அந்தக் குற்றத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது," என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"இன்னொரு சந்தர்ப்பத்தில் எதிர்க் கட்சி எம். எல் ஏ ஒருவர் சுடப்பட்டார்; ஆனால், அந்தக் குற்றவாளி, மந்திரி அந்த ஊருக்கு வந்துபோன சில நாட்களுக்கெல்லாம் ஜாமீனில் வெளிவந்திருக்கிறார்," என்றும் கூறப்பட்டது.

பஞ்சாயத்துத் தேர்தல்களில் தோற்கடிக்கப்பட்டவர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது என்றும், அத்தேர்தல்களில் சர்க்கார் அதிகாரிகளின் தலையீடு இருந்ததென்றும், காங்கிரஸ் பலவீனமாயிருக்கும் இடங்களில் தேர்தல்கள் நடத்தப்படுவதே இல்லை அல்லது ஒத்திப்போடப்படுகின்றன என்றும் தியாகி குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

மக்களாட்சியில் மக்கள் பிரதிநிதிகள்!

டில்லி மாநில சட்டசபை உறுப்பினர்களின் முன் மாதிரி?

புதுடில்லி மாநில சட்டசபை, அதன் சரித்திரத்திலேயே முதல் தடவையாக 'கோரம்' இல்லாததால் ஒத்திவைக்கப்பட்ட சம்பவம் செய்தியாகத் தரப்படுகிறது.

சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கொறடாவான டாஜித் சிங், தேவையான அங்கத்தினர்களைச் சபைக்குக் கொண்டுவர முயற்சித்தும் முடியாதுபோயிற்றாம்!

சென்னையில் கெந்தகப் பாறைகள்

இந்தியத் துணைக் கண்டத்தில் சென்னை, பீகார், மைசூர், சிம்லா மலைகள் ஆகிய இடங்களில் கெந்தகப் பாறைகள் இருக்கின்றன எனக் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகவும், ஒவ்வொரு இடத்திலும் எந்த அளவு கெந்தகம் கிடைக்கக் கூடும் என்பது ஆராயப்படவில்லை எனவும், மக்கள் சபையில் அரசாங்க சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

காதால்கேட்டதுதான்!

"எனக்கு, இதுதான் எனது கன்னிச் சொற்பொழிவா அல்லது, முதுமைச் சொற்பொழிவா என்பது தெரியாது"

—வி. வி. கிரி

"எனது தந்தை முன்னாட்களில், இந்தச் சபையின் அங்கத்தினராயிருந்தார்; மேலும் நான் இன்று பிரதமர் நேருவின் விசுவாசமிக்க தோழனாயிருப்பதைப் போல், என் தந்தையும் அன்று, பண்டித மோதிலாலின் இடக்கரமாயிருந்தார்."

—வி. வி. கிரி

"நமக்கு இலவச இரயில் பிரயாண அனுமதி தரப்பட்டது முதல் எனக்கு இரயிலில் மேல் படுக்கையே தரப்பட்டு வருகிறது."

—ரோஹிணி சௌத்ரி

"இரயில்வே மந்திரியையும், இரயில்வே மந்திரி இலாகாவையும் பழுது பார்ப்பதற்கும், புதுப்பிப்பதற்கும், அதிகமான வழி தேவைதான்."

—திருமதி தாராகேஸ்வரி சின்ஹா

மருத்துவக் கல்லூரி மூடப்படும்?

மாணவர்களின் வேலை நிறுத்தமே காரணம்?

மங்களூர், மார்ச் 2—

இறுதிப் பரீட்சைக்கு அனுப்பப்படுவதற்காக நடத்தும் தேர்வில் வெற்றி பெறாத மாணவர்களிடமிருந்து முழுச் சம்பளம் வாங்குவதை எதிர்த்து உடுப்பி, மணிபாலில் உள்ள கஸ்தூர்பா மருத்துவக் கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இது கண்ட கல்லூரி அதிகாரி (உள்) கல்லூரியையே காலவரையறை இன்றி மூடிவிட உத்திரவிட்டிருப்பதாக செய்தி ஒன்று கூறுகிறது.

பால்கன் ஒப்பந்த நாடுகள்

பால்கன் ஒப்பந்த நாடுகளின் வெளிநாட்டிலாகா மந்திரிகள் முதன் முறையாகக் கூடி விவாதித்திருக்கின்றனர்.

துருக்கி பிரதம மந்திரி அட்னென் மென்டெரஸ், அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கிறார்.

யூகோஸ்லேவியா, துருக்கி, கிரீஸ் ஆகிய நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகள், இதர நாடுகளும் ஒப்பந்தத்தில் சேருவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவது பற்றி விவாதித்தனர் என்று தெரிகிறது.

1954-ம் ஆண்டில் உற்பத்தியான கைத்தறித் துணியின் அளவு, 1953-ம் ஆண்டு உற்பத்தியைக் காட்டிலும் 15 கோடி கெஜம் அதிகம்.

இஞ்சினீயர் பட்டதாரிகளும் - வேலையின்றி கிடக்கின்றனர்!

தொழிற் பயிற்சி உடையோரும் திண்டாடுகின்றனர்

"1954-வது ஆண்டு முடிவில், தொழில் தேடித் தரும் நிறுவனத்தின் கணக்குப்படி, 857 இஞ்சினியர் பட்டதாரிகளும், அத்தாட்சிப் பத்திரம் பெற்றுள்ள 363 - தொழிற் பயிற்சி உடையோரும் வேலையின்றி இருக்கின்றனர் எனத் தெரியவருகிறது." கல்வி அமைச்சர் காரியதரிசி இத்தகவலை, மக்கள் சபையில் கொடுத்துள்ளார்.

புதுடெல்லி, மார்ச். 3—

1955, 56, 57-ம் ஆண்டுகளில் பட்டம் பெற இருக்கிற இஞ்சினீயர்களின் தொகை முறையே 3,000, 3,017, 3,040 - ஆக இருக்கக்கூடும் எனவும், அத்தாட்சி பெறும் தொழில் துறையினர் முறையே 4,020, 4,410, 4,550 - ஆக இருக்கக்கூடும் எனவும் மேற்படியார் கணக்கிட்டு அறிவித்துள்ளார்.

ஜீவனாம்சம் தராத கணவன்

மூன்றும் முறை சிறைத் தண்டனை

ஆமதாபாத், மார்ச். 3—

தனது மனைவிக்கு தான் மாதந்தோறும் தரவேண்டிய ஜீவனாம்சத் தொகையான ரூ. 301 தராத காரணத்தால் சோடே லகாநாரண் என்பவருக்கு பாட்டியாலா நீதிபதி ஒருமாத சிறைத்தண்டனை விதித்துள்ளாராம்.

மனைவிக்கு ஜீவனாம்சம் கொடுக்காததிற்காக சிறைக்குச் செல்வது அவருக்கு மூன்றாம் முறையாம்.

நான்காண்டுகளுக்கு முன் அவர் வேறொரு பெண்ணை இரண்டாம் தாரமாக மணந்துகொண்டபோது அவரது முதல் மனைவிக்கு உள்ள மூன்றுகுழந்தைகளை காப்பாற்றுவதற்காக மாதந்தோறும் ரூ 301 ஜீவனாம்சம் தரவேண்டுமென நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்துள்ளது

டில்லியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் டி. டி டி. தொழிற்சாலை ஆரம்பத்தில் ஆண்டொன்றுக்கு சுமார் 700 டன் டி.டி டி. உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

காந்தி போதனைக்குப் - பயிற்சிப் பட்டியல்

பள்ளிகளில் போதிக்க உருவாக்கப்படுமாம்!

புதுடில்லி, மார்ச் 3—

இந்தியா முழுவதிலும் உள்ள பள்ளிகளில் மாணவர்களுக்குப் பயிற்றுவிப்பதற்கு, காந்தியாரின் போதனைகளில் பாடப் பயிற்சிப் பட்டியல் ஒன்றை உருவாக்க, கூடியவிரைவில் ஒரு குழு நியமிக்கப்படும் என இந்தியப் பேரரசின் கல்வி அமைச்சரின் காரியதரிசி அறிவித்தார்.

உயர்நிலைப் பள்ளிகளுக்கு மட்டும்தான் அப்பாட போதனை இருக்கும் எனவும் அவரே கூறியுள்ளார்.

'கோபால் ரத்னா'

அதிகமான அளவு பால் கறக்கக் கூடியது என்று தீர்ப்பளிக்கப்படுகிற பசுவை வளர்த்தவர்கட்கு, 'கோபால் ரத்னா' என்ற பட்டமும், ரூ 2,500 ரொக்கப் பரிசும் வழங்க அகில இந்திய 'கோ சம்வர்த்தன' கவுன்சில் முடிவு செய்துள்ளதாம்.

நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிப்பதில் உற்சாகமூட்டுவதற்காகவே இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்படுகிறதாம்.

ஏற்கனவே, அதிகமான விளைச்சல் காட்டுபவர்களுக்கு 'அகில இந்திய விளைச்சல் போட்டி' இருப்பதைப் போலவே இந்த போட்டியும் இருக்குமாம்.

கவுன்சிலின் மூன்றாவது வருடாந்திரக் கூட்டத்திற்கு மத்திய மந்திரிகள் சிலரும் வந்திருந்தனர் என்று தெரிகிறது.

நாடகக் கலை

நாட்டின் நாகரீக வளர்ச்சியை அளக்கும் கருவி

"நாடகக் கலையின் முன்னேற்றத்திற்காக சர்க்கார், வசதிகளும், சலுகைகளும் அளிக்க முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்; ஒரு நாட்டினுடைய கலாச்சாரத்தின் தரத்தை அளவிட நாடகம் ஒரு சிறந்த சாதனமாகும்,"

என்று கர்நாடக பல்கலைக் கழக துணைவேந்தர் டி. சி. பாவாதே குறிப்பிட்டிருக்கிறார்

பல்கலைக் கழகத்தில், கர்நாடகப் பிரதேச நாடக விழாவினை துவக்கிவைத்துப் பேசுகையில் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்—'சர்க்கார் தரும் வசதிகளை கலைஞர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்'—என்று.

கல்லூரியில் சுமார் ஒன்பது கன்னட நாடகங்கள், விழாவினை ஒட்டி நடைபெறும் எனத் தெரிகிறது.

பட்டினிப் போரை ஆதரிக்கமாட்டார்களாம்!

பம்பாய் முதன் மந்திரி கண்டிப்பு

பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய், சட்டசபையில் பேசுகையில், 'எந்த ரூபத்திலும் யார் பட்டினிப் போர் துவக்கினாலும் அதை சர்க்கார் ஆதரிக்காது,'. என்று கூறியிருக்கிறார்.

பம்பாய் காஸ் கம்பெனி நிர்வாகிகளுக்கும் — தொழிலாளர்களுக்குமிடையே எழுந்துள்ள தகராறை விசாரிக்க கமிஷன் நியமிக்கவேண்டும் என்று கோரி திருமதி அம்பிகா பெஹ்ரே என்ற பெண்மணி பட்டினிப் போர் துவக்கியிருப்பதை ஒட்டியே இரு அங்கத்தினர்கள் சட்டசபையில் கேள்வி கேட்டனர். அதன்போதுதான் முதன் மந்திரி மேற்கண்ட மாதிரியில் பதிலளித்திருக்கிறார்.

"பின் எந்தவகையான வேலை நிறுத்தத்தைசர்க்கார் ஆதரிக்கும்"? என்று கேட்கப்பட்டபோது, 'அரசியல் சட்டபூர்வமான வேலை நிறுத்தத்தினையே,' என்று முதன் மந்திரி கூறியிருக்கிறார்.

பிரயாணப் படி பெறுவர்

சென்னை, மார்ச். 3—

கிரிமினல் நீதி மன்றங்களுக்கு உத்தியோக முறையில் சாட்சிகளாகச் செல்லும் மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்கள், தற்காலிக அதிகாரம் பெற்ற மாவட்ட ஆட்சி மன்ற தலைவர்கள், மற்றும் அங்கத்தினர்கள் ஆகியோருக்கு சர்க்கார் நிதியிலிருந்து போக்குவரத்துக்கான பிரயாணப்படி தருவதற்கு சர்க்கார் உத்தரவிட்டுள்ளனர்.

சிந்திரியில் ஒரு சிமண்ட் தொழிற்சாலை

உரத் தொழிற்சாலையுடன் தனி நபர் ஒப்பந்தம்

புதுடில்லி, மார்ச் 3—

சிந்திரியில் புதிதாக ஒரு சிமெண்ட் தொழிற்சாலை துவங்கப்பட இருக்கிறது. அதற்காகத் தனி நபர் ஒருவர், சிந்திரி உரத் தொழிற்சாலையுடன் உடன்படிக்கை செய்துகொண்டுள்ளார்.

சிந்திரி உரத் தொழிற்சாலையில் துணைப் பொருளாகக் கிடைக்கும் ஒருவகைச் சுண்ணாம்பு, சிமெண்டுக்குத் தேவைப்படும் முக்கிய மூலப் பொருட்களில் ஒன்றாகும். அதைக் கொள்முதல் செய்வது குறித்து செய்து கொள்ளப்பட்டுள்ளது தான் மேற்படி ஒப்பந்தம்.

சிமெண்ட் தொழிற்சாலை இயங்குவதற்கான நடவடிக்கை முடிவிற்கு வர இருப்பதாகவும், வருகிற செப்டம்பர் மாதத்தில் சிமெண்ட் உற்பத்தி முதல் முதலாகத் துவங்கப்படும் என்ற உண்மையையும் மக்கள் சபையில் உற்பத்தி மந்திரி அறிவித்தார்.

செய்திச் சுருள்

★

பாண்டியனார் நினைவு நாள்

22—2—55 மாலை 5 மணியளவில், கல்லூரணி பாண்டியனார் நினைவுப் படிப்பகம், உயர்நிலைப் பள்ளி இவைகளின் சார்பில், திரு. மா. வை. செல்லம் தலைமையில், பாண்டியனார் மறைவு 2-ம் ஆண்டு நினைவு நாள் நடைபெற்றது.

தோழர் பால்ராஜ் இரங்கற் பாக்கள் இசைத்தார்; தோழர்கள் சுப்பையா, புன்னைமுத்து ஆகியோர் சௌந்திர பாண்டியனாரின் தொண்டுகளை விளக்கிப் பேசிய பின், தோழர் க. திருமாறன் பாண்டியனார் புகழ் விளங்க அவர் ஏற்றி வைத்த 'அறிவுக் கோயில்'களை மங்காது காக்க வேண்டுமென்று குறிப்பிட்டுப் பேசினார்.

உதகை அண்ணா முரசொலி மன்றம்

25-2-55 மாலை 7-30க்கு மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் தோழர் எஸ். பி. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றபோது, வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டபின், நீலகிரி மாவட்டத்திலுள்ள உணவு ஆராய்ச்சிசாலையை ஐதராபாத்துக்கு மாற்றுவதை வன்மையாகக் கண்டித்தும், அவ்வாறு மாற்றக் கூடாது என மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டும், தோழர்கள் கண்ணதாசன், தோழர் சுந்தரேசன் ஆகியவர்களின் தந்தையர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'ரத்தத் துளி'—நாடகம்

ஆற்றங்கரை (நெல்லை மாவட்டம்) தி. மு. கழக உட்பிரிவான முழுமதி நாடக மன்றத்தாரின் 'ரத்தத் துளி' நாடகம், தோழர் டி. கே. வி. நாதன் தலைமையில் 25—2—55 இரவு நடைபெற்றது. நாடக முடிவில், தோழர் துரைராஜ் "நாடகக் கலையும் நாமும்" என்பது பற்றிப் பேசினார்.

திருக்குறள் மாநாடு

பெங்களூரில் சிறந்த முறையில் ஒரு திருக்குறள் மாநாடு வரும் மே மாதத்தில் நடத்த வேண்டும் என்பதற்காக ஆலோசனைக் கூட்டம் ஒன்று 27—2—55 காலை 11 மணிக்கு டாஸ்கர் டவுன் நகரவை உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றபோது, மாநாட்டிற்கான செயற் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பூலாமேட்டில் தேகப் பயிற்சித் திடல் அமைப்பு

28—2—55 மாலை 4 மணிக்கு, தோழர் ஆ. இராமசாமி தலைமையில் 'எம். ஜி. ஆர். தேகப் பயிற்சி திடல்' அமைக்கப்பட்டது. தோழர் எஸ். கண்ணுதுரை கொடியேற்றுவித்தார். தோழர் சண்முகம் தேகப்பயிற்சியின் அவசியம் பற்றி பேசினார்.

திருத்தம்

22—2—55 'நம் நாடு' இதழில், 30—1—55 மாலை 4 மணியளவில் திருப்பூரில் தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றதாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. தோழர்கள், திருப்பூர் என்றிருப்பதற்குப் பதிலாகத் திருப்புத்தூர் என்று திருத்தி வாசித்துக் கொள்ள கேட்டுக்கொள்கிறோம்.

அத்துக்குடி, கல்லக்குடி அறப்போரில் உயிர் நீத்த தோழர்களின் குடும்ப உதவி நிதிக்கு திருப்புத்தூர் தி. மு. கழகச் சார்பில் ரூ - 5/ அனுப்பப்பட்டது.

திருமணம்

11—2—55 காலை 10½ மணியளவில் தென்னூர் தோழர் ஆறுமுகம்—தோழியர் எல்லம்மாள் சீர்திருத்தத் திருமணம் தோழர் சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது

★★

27—3—55-ல் தி. மு. கழக சிற்றூர்-பேரூர்-நகரக் கிளை செயற்குழுத் தேர்தல்

10—4—55-ல் மாவட்டக் கிளைச் செயற்குழுத் தேர்தல்

24—4—55-ல் புதிய பொதுக்குழுக் கூட்டம்: பொதுச்செயலாளர் தேர்தல்

பொதுச்செயலாளர் அறிவிப்பு

★

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் இவ்வாண்டு நடைபெற வேண்டிய தி. மு. கழகத் தேர்தல்கள் பற்றிக் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள்; அது வருமாறு:—

தி. மு. கழக சிற்றூர் (சிறிய பஞ்சாயத்து-Minor Panchayat)க் கிளை, பேரூர் (பெரிய பஞ்சாயத்து-Major Panchayat)க் கிளை, நகர (நகராட்சி-Municipality)க் கிளை, சென்னை வட்ட (Division)க் கிளை ஆகியவற்றின் புதிய செயற்குழுத் தேர்தல்கள் நடைபெற, 27—3—55 ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நாளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

எல்லா மாவட்டங்களின் செயற்குழுத் தேர்தல் நாளாக, 10—4—55 ஞாயிற்றுக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

புதிய பொதுக்குழு கூடிப் பொதுச்செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் நாளாக, 24—4—55 ஞாயிற்றுக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

1—3—55-ஆம் நாளிலிருந்து 31—4—55-ஆம் நாள் வரையில் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. 28—2—55-ம் நாள்வரை உறுப்பினரானவர்கள் மட்டுமே கிளைக் கழகத் தேர்தலில் பங்கு கொள்ள வேண்டும். 28—2—55-ஆம் நாளுக்கு முன்பு அமைக்கப்பட்ட கிளைக் கழகங்கள் மட்டுமே தேர்தல் நடத்த வேண்டும். புதிய கிளைக் கழகங்கள் அமைப்பது 1—5—55-க்கு மேல்தான் நடைபெற வேண்டும்.

கிளைக் கழகங்கள் அண்மையில் தேர்தல் நடத்தியிருந்தாலும் 27—3—55-ஆம் நாளில் மீண்டும் கூடி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேர்தல் முடிவுகளைக் கிளைக் கழகப் பதிவுச் சீட்டில் எழுதி, 31—3—55-க்குள் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். கிளைக் கழகப் பதிவுச் சீட்டு தலைமைக் கழகத்திலிருந்து 10—3—55-ஆம் நாள் அனுப்பி வைக்கப்படும். பதிவுச் சீட்டு கிடைக்கப்பெறாத கிளைக் கழகங்கள் உடனே தலைமைக் கழகத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

27—3—55-ல் தேர்தல் நடத்திப் பதிவுச் சீட்டைத் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கும் கிளைகள் மட்டுமே மாவட்டக் கிளைச் செயற்குழுத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப் பெறும்.

கிளைகளின் தேர்தல் விதிகளும், முறைகளும் அடுத்த அறிக்கையில் வெளியிடப்படும்.

'அறிவகம்',
சென்னை.
1—3—55

சி. என். அண்ணாதுரை,
பொதுச்செயலாளர்

★★

பருவ மழை தவறினால் 'வசூலிப்பு' நிறுத்தப்படுமாம்

ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஆறுதல்

நெய்வேலி திட்டம் பற்றி 'சப்பைக்கட்டு!'

சென்னை மேல்சபையில் மந்திரி சுப்பிரமணியம்

"நெருக்கடி ஏற்படும் அளவுக்கு மீண்டும் விலைவாசிகள் குறைந்துவிட்டால், அல்லது பருவமழை தவறிவிட்டால், ரூபாய்க்கு இரண்டணா அதிகம் விதிக்கப்பட்டுள்ள நிலவரி 'சர்சார்ஜ்' வசூலிக்கப்படமாட்டாது; 'கால மழை' தவறாமல் நன்றாக விளையுமென்ற அடிப்படையிலேயே இவ்வரி விதிக்கப்படுகிறது,"

—என்று, சென்னை மேல்சபையில், நான்கு நாட்களாக நடைபெற்ற வரவு—செலவுத் திட்ட விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில், நிதி மந்திரி சுப்பிரமணியம் அறிவித்தார்.

மேலும் அவர் சொன்னார்:

"வரவு—செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை ரூ 330-லட்சமென்று மதிப்பிடப்பட்டுள்ளது; பல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றவிருப்பதால், மேற்கொண்டும் துண்டு விழக் கூடும்; துண்டு விழும் தொகை ரூ. 330-லட்சத்திற்குமேல் போகாதென்று நிச்சயமாகத் தெரிந்திருந்தால், புதிய வரிகளை விதிக்காமல் இருந்திருப்பேன்."

"ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமையை நான் மறந்து விடவில்லை; கொஞ்சம் நிதானமான முறையில் காத்திருக்குமாறு அவர்களைக் கோருகிறேன்; ஆரம்பக் கல்விக் கமிட்டியும் இது சம்பந்தமாக யோசனை கூறுமென்று நம்புகிறேன்; ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற விரைவில் ஆவன செய்யப்படுமென நம்புகிறேன்."

"கல்லூரிகளில் ஆங்கிலத்தைப் போதனா மொழியாக்குவதைத் தவிர, வேறு வழியில்லை; பல கல்லூரிகளில் ஆங்கிலத்தைப்போதனா மொழியாக வைத்துக்கொண்டு, ஒரு சில கல்லூரிகளில் மட்டும் தமிழை போதனா மொழியாக ஏற்படுத்தியதால்தான், அந்தப் பரீட்சார்த்த முயற்சி தோற்றுவிட்டது; கல்லூரிகளின் நிர்வாகத்தில் தலையிட நான் விரும்பவில்லையானாலும், இதுபோன்ற ஒரு அடிப்படைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவை தவறிவிட்டால், சர்க்கார் அதில் தலையிட்டே தீரவேண்டியிருக்கும்."

"நெய்வேலி திட்டத்திற்கு ரூ 60 கோடி செலவாகும்; சென்னை சர்க்காரால் அவ்வளவு பணத்தைச் செலவிட முடியாது; இந்தத் திட்டத்தினால் பலன் கிடைக்குமென்று 95-சதவிகிதமும், சந்தேகம் 5-சதவிகிதமும் இருப்பதால்தான் மத்திய சர்க்காரிடம் இப்பொறுப்பு விடப்பட்டுள்ளது; என்றாலும், எந்த நோக்கிலும், ஆகும் செலவைத் தருவிட்டால், சென்னை சர்க்காரிடமே திட்டத்தை ஒப்படைத்து விடுவதாக மத்திய சர்க்கார் உறுதி கொடுத்துள்ளது."

சாகும்வரை - பட்டினிப் போர்!

ஆப்கன் அரசியல் கைதிகள் மேற்கோள்வர்

பூனா, மார்ச் 3—

இந்தியாவில் உள்ள இரு ஆப்கானிய அரசியல் பாதுகாப்புக் கைதிகளான சர்தார் இனயத்துல்லா, சர்தார் ஹப்ஜுலா ஆகிய இருவரும் சாகும்வரை உண்ணாவிரதமிருக்க எண்ணியிருப்பதாக அறிவித்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் பண்டித நேருவுடையவும் இந்திய மக்களுடையவும் கவனத்தை தங்கள் குறைகள்பால் ஈர்க்கவே, அவர்கள் உண்ணாவிரதம் இருக்கப்போகிறார்களாம்.

அந்த இரு கைதிகளும், கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கண்டுள்ளவற்றில், தங்கள் குழந்தைகளுக்குத் தரப்படும் மருத்துவ, கல்வி வசதிகள் போதுமானதாயில்லையென்றும், தங்களுக்குத் தரப்படும் வாழ்க்கைச் செலவுத் தொகையை அதிகரிக்க வேண்டுமெனவும் கோரியுள்ளனர் என்று தெரிகிறது.

வரவு — செலவுத் திட்டம்

முன்கூட்டியே வெளியானது பற்றி உரிமைப் பிரரேபணை

டில்லி சட்டசபையில், கே. எல். குப்தா என்பவர் ஒரு உரிமைப் பிரரேபணையைக் கொண்டு வந்தார்.

"முதன் மந்திரி, தமது வரவு-செலவுத் திட்டத்தை சபையில் தாக்கல் செய்து சொற்பொழிவு நிகழ்த்துவதற்குமுன், திட்டத்தில் உள்ள புள்ளி விவரங்கள் சில அச்சிட்டு அங்கத்தினர்களுக்குத் தரப்பட்டதுடன், பத்திரிகைகளிலும் வெளிவந்திருப்பது சபையின் உரிமையைப் பாதிப்பதாகும்," என்று அவர் கூறியிருக்கிறார்.

முதன் மந்திரி தவறை ஒப்புக்கொண்டு, சபையிடம் மன்னிப்புக் கோரினார். இனி மறுபடியும் அப்படி நடைபெறாது என்று உறுதிமொழியும் அளித்தார்.

சபைத் தலைவியான டாக்டர் சுசிலா நாயர் முதன் மந்திரியின் உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார்.

ஜப்பானிய முறையில் நெசவு ஆலை

வடநாட்டு தொழில் வளர்ச்சி

கான்பூர் நிறுவனம் ஒன்று 20,000 கதிர்களுடன் கூடிய துணி நெசவு ஆலை ஒன்றை ஜப்பானிய முறையில் நிறுவ எண்ணியுள்ளதாம்!

முதலில் 40 லட்சம் ரூபாய் செலவில் ஒரு இயந்திர சாலையை அந்த நிறுவனம் ஏற்படுத்துமாம்.

இந்த தொழிற்சாலை, நெசவாலைக்குத் தேவையான உபகரணங்களைத் தயாரிக்குமாம்.

கழகக் கூட்டங்கள்

★

சி. என். பாளையம்

8—3—55 மாலை 5 மணிக்கு

பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

★

வேடிச்சிபாளையம்

அழகிரி சதுக்கம், குமாரவேல் அரங்கில்

8—3—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: வி. ஏ. இராமநாதன்

கொடியேற்றுபவர்:
பி. ஆர். சண்முகம்

திறப்பாளர்:
கே. ஏ. முருகேசனார்

பேசுபவர்:
ஈ. வே. கி. சம்பத்

சொற் பயிற்சிக் கூட்டம்

6—3—55 காலை 10 மணிக்கு, சென்னை 39-வது வட்ட தி. மு. கழகக் கட்டடத்தில், தோழர் என். கிருட்டிணன் தலைமையில் 'எண்ணம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

ஈ. வெ. கி. சம்பத்

சுற்றுப்பயணம்

★

மார்ச் 6: கரூர் (காலை)
திருச்சி (மாலை)
7: மேட்டு மகாதான புரம்
8: வேடிச்சிபாளையம்
9: கும்பகோணம் (ராதா நாடகம்)
10, 11, 12: சென்னை (ஓய்வு)
13: வேலூர்

எவ்வளவு?

"1953–54ல், இந்தியா 4,893-மணங்கு அபினி ஏற்றுமதி செய்தது; இதனால் கிடைத்த மொத்த வருமானம் ரூ. 1,23,64,000" என்று டெல்லி மேல் சபையில் அறிவிக்கப்பட்டது.

சென்னை சட்டசபையில்....

★

'அணுகுண்டு'க்கு ஆபத்து!

"ஆபத்தானதும், விபத்துகளுக்குக் காரணமானதுமான 'அணுகுண்டு பட்டாசு' போன்றவைகளைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுப்பதென்பதுபற்றி சர்க்கார் யோசித்து வருகிறது; வியாபாரிகள் சேமித்து வைத்துள்ள பட்டாசுகளை நாசம் செய்துவிடும்படி கூறுவதற்கு சர்க்காருக்கு அதிகாரம் கிடையாது; ஆனால், எப்படி, எவ்வாறு அவைகளைப் பாதுகாப்பது என்பதுபற்றிய விதிகளை மட்டும் சர்க்கார் நிர்ணயிக்கலாம்," என்று நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

தேசிய விஸ்தரிப்பு திட்டம்

சென்னை மாநிலத்தில் மொத்தம் 112 பிர்க்காக்களில் தேசிய விஸ்தரிப்புத் திட்டம் அமுல் நடத்தப்படுகிறதென்றும், பிற்போக்கானதும் மானாவாரியாகவுமுள்ள பகுதிகளும் இத்திட்ட வரம்பில் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்தார்.

'யோசனை'—பரிசீலிப்பு!

கைத் தொழில்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதில், கூட்டுறவு இலாகா எப்படி உதவ முடியுமென்பது இப்போது பரிசீலனையிலிருப்பதாக அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்தார்.

"வீடுகள் கட்ட ரூ. 500 வரை கூட்டுறவு முறையில் தொழிலாளர்களுக்குத் தந்துதவுவது பற்றி கவனிக்கப்படுமா?" என்ற கேள்விக்கு, அமைச்சர், "இம்மாதிரி திட்டம் கூட்டுறவின் கீழ் எப்படி வர முடியுமென்பதை ரிஜிஸ்திரார் கவனித்து வருகிறார்," என்றார்.

வற்புறுத்த இடமில்லையாம்

"ஏகமனதாக தொழில் முக்கூட்டு விசாரணைக் குழுவின் சிபார்சுகளிருந்தாலும், இப்போதுள்ள சட்டப்படி, அச்சிபார்சுகளை அமுல் நடத்தவும், தொழில் நிர்வாகிகளை வற்புறுத்தவும் இடமில்லை" என்று கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் பக்தவத்சலம் கூறினார்.

அதென்ன அவ்வளவு பிரமாதம்?

"நெய்வேலி நிலக்கரி சுரங்கத் திட்டத்திற்காக, 1954 மார்ச் மாதத்திலிருந்து டிச 31-ந்தேதி வரையில், 35,92,424—14—6 செலவாகி இருக்கிறதென்றும், அதற்குமுன் இதற்காகச் செலவானது ரூ. 34,53,097 என்றும், இந்தச் செலவு முழுவதையும் இம்மாநில சர்க்காரே செய்ததென்றும், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், அமைச்சர் பக்தவத்சலம் குறிப்பிட்டார்.

உதவி செய்வோம்-ஆனால் ஆரம்பிக்கமாட்டோம்!

"சென்னை மாநிலத்தில் மொத்தம் 430 பிரசவ-குழந்தை பராமரிப்பு விடுதிகளும், 54 பிரசவ விடுதிகளும் இருக்கின்றன; இம்மாதிரியான விடுதிகளை ஆரம்பிப்பது உள்ளாட்சிக் கழகங்களின் பொறுப்பாகும்; சர்க்கார் அவைகளுக்கு உதவி செய்யும்," என்று சுகாதார மந்திரி அறிவித்துள்ளார்.

கொள்கை என்ன?

"கல்லூரிகளைத் திறப்பது பற்றி அரசாங்கத்தின் கொள்கை என்ன? கல்லூரி இல்லாத இடங்களில், அதைத் திறக்க முன்வரும் தனிப்பட்டவர்களுக்கு உதவி அளிக்கப்படுமா?" என்ற கேள்விக்கு நிதி அமைச்சர், இம்மாதிரியான உதவியை சர்க்கார் செய்யுமென்றும், கடலூரில் கல்லூரி திறப்பதற்கு சர்க்காருக்கு உத்தேசமில்லையென்றும், சட்ட விதிகளுக்குட்பட்டு, தனிப்பட்டவர்களின் முயற்சிகளுக்கு சர்க்கார் உதவுமென்றும் குறிப்பிட்டார்.

அது உண்மையா?

"பயிர்களுக்குப் பூச்சிகளால் ஏற்படும் சேதங்களை ஒழிப்பதற்கு சாத்தியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன; அந்நடவடிக்கை பலனும் அளித்துள்ளது; இதனால் தஞ்சை மாவட்டத்தில், சென்ற ஆண்டைவிட 10 சதவிகிதம் உற்பத்தி அதிகரிக்கும்," என்று மந்திரி பக்தவத்சலம் அறிவித்துள்ளார்.

புகாருக்குப் பிறகுதான்!

சென்னை சர்க்கார் பஸ்களில் டிக்கெட்டுகள் தவறாக உபயோகிக்கப்படுவதைத் தடுக்கவே, டிக்கெட்டுகளில் துவாரம் செய்யப்படுகிறதென்றும், பிரயாணிகள் சிலரிடமிருந்து வந்த புகார்களைக் கவனித்த பிறகே இம்முறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதென்றும், டிக்கெட்டுகளை திருட்டுத்தனமாகச் சில கண்டக்டர்கள் உபயோகிக்கும் 'நிலைமை' இதனால் போக்கப்படுகிறதென்றும் அமைச்சர் பரமேஸ்வரன் கூறினார்.

எல்லாக் கண்டக்டர்களையும் பற்றி தாம் அவ்வாறு கூறவில்லையென்றும், சில கண்டக்டர்கள் அம்மாதிரி செய்திருப்பதாக வந்த புகார்களைக் கவனித்த பிறகுதான், குறைபாடுகளுக்கு இடமில்லாமல் செய்ய இம்முறையைக் கையாள நேர்ந்ததென்றும் அவர் கூறினார்.

பீகாரில் தங்கம்!

"பீகாரிலுள்ள சப்பித் தலாப் பிரதேசத்தில் தங்கம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது," என்று, மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

'புருனோ'வின் வரலாறு

சென்னையில் விளக்கம்

சென்னை மாவட்ட தி. மு. கழக நிதிக்காக கோகலே மண்டபத்தில், 4—3—55 மாலை 6-30 மணியளவில் ஓர் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெற்றது.

நன்கொடையாக ஆறு அணா டிக்கட் நான்கு செலுத்தி, பெண்கள் உட்பட ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர்.

கூட்டத்திற்கு தோழர் சாந்தி-கல்யாணசுந்தரனார் தலைமை தாங்கினார்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் "புருனோ"வின் வரலாறு குறித்து உருக்கமானதோர் உரையாற்றினார்.

பின்பு, தலைவர் முடிவுரையும் நன்றி நவிலலும் நடைபெற்றதும் 9 மணி அளவில் கூட்டம் இனிது முடிவுற்றது.

இராஜப்பிரமுகருக்கு ரூ. 11 லட்சம் சம்பளம் ஏன்?

பதவியை உருவாக்கிய மத்திய அரசாங்கமே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும்

இராஜஸ்தான் சட்டசபையில் அறிக்கை

ஜெய்பூர், மார்ச் 4—

"இராஜஸ்தான் மகாராஜப் பிரமுகருக்குத் தரப்படும் 11 லட்ச ரூபாயும், அவரது காரியாலயத்திற்கு செலவிடப்படும் ரூ. 19,900-மும் மாநில அரசாங்கத்திற்குத் தேவையில்லாத சுமைகளாகும்; அதேபோல உப-ராஜப் பிரமுகருக்குத் தரப்படும் ரூ. 1 லட்சமும் அனாவசியமானது."

"இந்த பதவிகளை உருவாக்கியவர்கள் மத்திய அரசாங்கத்தார்; எனவே, மத்திய அரசாங்கம்தான் அந்த பதவிகளை வகிப்பவருக்குச் சம்பளம் தரும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ள வேண்டும்."

"இராஜஸ்தான் மகாராஜப் பிரமுகருக்குத் தரப்படும் சம்பளத்தைக் கடுமையாகக் குறைப்பதினாலும், மந்திரி சபை அலுவலகச் செலவுகளை மட்டுப்படுத்துவதினாலும் சர்க்காருக்கு ரூ. 28,30,000 மிச்சப்படும்."

"வேறு எந்த மாநிலத் தலைவருக்கும் தரப்படும் சம்பளத்தோடு ஒப்பிட்டாலும், இந்த இராஜப்பிரமுகரின் சம்பளம் அதிகமாயிருக்கிறது. மேலும் இவர்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது; அதனால் அந்த வழியில் மாநில அரசாங்கத்திற்குக் கிடைக்கும் பங்கு கிடைக்காமல் போய்விடுகிறது."

"இப்போதுள்ள மந்திரிகள் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 16,900 செலவாகிறது; இத்தொகையும் மிக அதிகமானதாகும்; மந்திரிகளுக்கு, 'அந்தரங்கக் காரியதரிசிகள்' நியமிப்பதை நிறுத்த வேண்டும்; அதனால் ஆண்டொன்றுக்கு ரூ. 61,000 மிச்சப்படும்,"

—என்று, இராஜஸ்தான் மாநில சட்டசபையில் தாக்கலாகியுள்ள 1953—54-ம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை குறிப்பிடுகிறது.

அந்த அறிக்கையில், மேலும் இன்னும் பல துறைகளில் செலவு அதிகமாயிருப்பதைக் கண்டித்தும்; அவை குறைக்கப்பட வேண்டும் என்றும் கருத்தறிவிக்கப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.